12.03.2025.

## கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

## அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தன்ராஜ் | | |
| த/பெ | வேணு | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 60/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதாகும். அது அ.சா.ஆ.5 ஆகும். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதாகும். அது அ.சா.ஆ. 6 ஆகும். 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதாகும். அது அ.சா.ஆ. 7 ஆகும். 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதாகும். அது அ.சா.ஆ. 8 ஆகும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு காவல் துறையினர் வந்து என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கி வந்தார்கள். என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. என் முன்பு யாரையும் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. என் முன்பு பொருட்கள்,

ஆயுதங்கள் எதையாவது கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 24/10/2014 ந் தேதி இவ்வழக்கில் முதல் எதிரி நீதிமன்ற பாதுகாவலில் இருந்து எடுத்து காவல் நிலையத்தில் வைத்து 1ம் எதிரியை விசாரிக்க 1ம் எதிரி தாமாக முன்வந்து யாருடைய தூண்டுதல் இல்லாமலும், ஆசை வார்த்தை இல்லாமலும், என் முன்னிலையிலும், ஆழ்வார் என்பவர் முன்னிலையிலும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் எதிரிக்கும், கண்டம்பாக்கத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஆறுமுகம் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது குறித்து முதலில் ஆறுமுகம் என்பவரை கொலை செய்ததாகவும், அந்த கொலை வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக இருந்த ஆறுமுகத்தின் அண்ணன் முருகன் என்பவர் இருந்து வந்ததாகவும், முருகன் என்பவரிடம் பல முறை சமாதானம் பேசியும் பயன்ஏற்படாத நிலையிலும், கடந்த 29/08/2014 ந் தேதி அதிகாலை 3. 30 மணியளவில் முருகன் தன் வீட்டின் திண்ணையில் படுத்து இருந்தவரை கொலை செய்ததாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அவர் கொலைக்கு பயன்படுத்திய கத்தியை தன்னை அழைத்து சென்றால் கண்டம்பாக்கத்தில் உள்ள 1ம்எதிரியின் வீட்டு தோட்டத்தில் மரத்தின் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்வேன் என்று சொன்னதன் பேரில் நானும், ஆழ்வாரும் எங்களுடன் விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளரு'ம் மற்றும்போலீசார் சகிதம் சம்பவ இடம் சென்று 1ம்எதிரி கார் மற்றும் அதற்குள் மறைத்து வைத்திருந்த

கத்தியை எடுத்து ஆஜர் செய்தேன். காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அந்த மகசரில் நானும், ஆழ்வாரும் சாட்சியாக கையொப்பம் போட்டோம் என்றும், அதே போல் 13ம் எதிரி ராமதாஸ் த/பெ முனியன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் 1ம் எதிரிக்கு கத்தியை கொடுத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ஆழ்வாரும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**